செ.வெ.எண்:07 நாள்:04.01.2017

# பத்திரிக்கைச் செய்தி

## கால்நடை பராமரிப்புத்துறை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.09.2011 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

2016-17ம் நிதியாண்டில் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கரூர் மாவட்டத்தில் வழங்கப்படவுள்ள 24 கிராமங்களில் இரண்டாம் கட்டமாக 17 கிராமங்களுக்கு 1393 பயனாளிகள் கிராமசபா மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு விலையில்லா ஆடுகள் வழங்கப்படவுள்ளது. விலையில்லா ஆடுகள் வழங்க பயனாளிகளை தேர்ந்தெடுக்கும்பொருட்டு, விலையில்லா ஆடுகள் வழங்க குழு உறுப்பினர்களைக் கொண்ட கிராமசபா கூட்டம் மூலம் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

11.01.2017ம் தேதி அன்று அம்மாபட்டி, பி.அணைப்பாளையம், தேவர்மலை, காதப்பாறை, களப்பள்ளி, ஆண்டாங்கோயில் மேற்கு ஆகிய 6 கிராம பஞ்சாயத்துகளுக்கும், 12.01.2017ம் தேதி அன்று ஆரியூர், அத்திபாளையம், ஆத்தூர் பூலம்பாளையம், கடம்பங்குறிச்சி, ஹிரணியமங்கலம், அப்பிபாளையம், ஆர்ச்சம்பட்டி, சின்னியம்பாளைம், கூடலூர் ஆகிய 9 கிராம பஞ்சாயத்துகளுக்கும், 13.01.2017ம் தேதி அன்று பாலராஜபுரம், ஆண்டாங்கோயில் கிழக்கு ஆகிய 2 கிராம பஞ்சாயத்துகளுக்கும் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு அந்தந்த கிராமங்களில் கிராமசபா கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் அந்தந்த கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் கிராமசபா குழு உறுப்பினர்களிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதில் அந்தந்த கிராமங்களை சேர்ந்த பொதுமக்களில் கீழ்க்கண்ட தகுதி வாய்ந்த பயனாளிகளை கிராம சபா குழு உறுப்பினர்கள் மூலம் பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என கரூர் மாவட்ட ஆட்சியர் திரு.கு.கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

**பயனாளிகளாக தேர்ந்தெடுக்க உரிய தகுதிகள்**

1. குடும்பத்தின் பெண் உறுப்பினர் மட்டுமே பயனாளிகளாக தேர்ந்தெடுக்க தகுதி படைத்தவர். ஏழையிலும் ஏழையாக இருத்தல் வேண்டும்.
2. நிலமற்ற விவசாய தொழிலாளராக இருக்க வேண்டும்
3. அந்த கிராமத்தில் நிரந்தர குடியிருப்பவராக இருக்க வேண்டும்
4. அவரது குடும்பத்தில் ஒரு நபரேனும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்
5. தற்போது சொந்தமாக மாடு / வெள்ளாடு / செம்மறியாடு வைத்திருப்பவராக இருக்கக் கூடாது.
6. அவரோ, அவரது குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர் எவரும் எவ்வித மத்திய, மாநில அரசுப்பணியிலோ, பொதுத்துறை மற்றும் கூட்டுறவுத் துறையிலோ பணிபுரிபவராக இருத்தல் கூடாது. மேலும், எவரும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளாகவும் பதவி வகிக்கக் கூடாது. (குடும்பம் -தாய்,தந்தை,கணவன், மனைவி, மகன்,மகள், மருமகன், மருமகள், மாமனார், மாமியார்)
7. அரசின் இலவச கறவை மாடு வழங்கும் திட்டத்தின் பயனாளிகளாக இருக்கக்கூடாது.
8. இரண்டு ஆண்டுகள் ஆடுகளை வைத்து பராமரிப்பவராக இருத்தல் வேண்டும்(இரண்டு ஆண்டுகளுக்கு ஆடுகளை விற்கக் கூடாது)
9. குறைந்தபட்சம் 30 சதவிகிதம் பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் ( ஆதிதிராவிடர்கள் 29 % பழங்குடியினர் 1%)
10. இதே திட்டத்தில் ஏற்கனவே பயனடைந்தவராக இருந்தல் கூடாது.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**